**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**
**ஆறாம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (WRITTEN EXAMINATION)**

**ஜூலை–ஆகஸ்ட் – 2021**
**D061 இலக்கியத் திறனாய்வு**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

## பிரிவு – 1

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. 'Criticism' என்ற சொல்லிற்கு இணையாகத் திறனாய்வு என்ற சொல்லை வழக்கத்தில் விட்டவர் யார்?
2. படைப்பிற்கும் படைப்பாளிக்கும் செவிலி போன்றவர் யார்?
3. இலக்கியத்தின் மொழிதல் திறனுக்கு அடி இழையாக இருப்பது எது?
4. கட்டடக்கலை, சிற்பக்கலை ஆகியவை எவ்வகையான கலையில் அடங்குகின்றன?
5. தத்துவ நிலையில் அமைந்த புதுமைப்பித்தனின் கதை எது ?
6. தமிழில் ரசனை முறைத் திறனாய்வின் முன்னோடியாகத் திகழ்பவர் யார்?
7. சைவ சித்தாந்தம் எவற்றை விளக்கும் தத்துவமாக உள்ளது?
8. பகுப்புமுறை உளவியலை வகுத்துச் சொன்னவர் யார்?
9. தமிழில் கிடைக்கப்பெற்ற முதல் உரை நூல் எது?
10. புதுமைப்பித்தனும் கு.ப, ராசகோபாலனும் எழுதிய இலக்கியம் பத்திரிகை எது?
11. முதன் முதலாகத் தமிழில் திறனாய்வு நூலை எழுதியவர் யார்?
12. குடிமக்கள் காப்பியம் என்ற நூலை எழுதியவர் யார்?
13. கட்டவிழ்ப்பு என்ற அணுகுமுறையை முன்மொழிந்தவர் யார்?
14. பெண்ணின் பெருமை என்ற நூலின் ஆசிரியர் யார்?
15. தமிழில் தலித் இலக்கியத்தின் முன்னோடிகளாக்க் கருதப்படும் மூவர் யாவர்?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக.** **(5x3=15)**

1. இலக்கியம் என்றால் என்ன?
2. அழகியல் உத்திகள் குறித்து விவரி?
3. முடிபுமுறைத் திறனாய்வு பற்றி எழுதுக.
4. மனத்தின் மூன்று அடுக்குகள் யாவை?
5. உரைகளின் முக்கியத்துவம் குறித்து விவரிக்க.
6. கைலாசபதி – குறிப்பு வரைக.
7. பின்னை அமைப்பியல் குறித்து எழுதுக.
8. பெண்ணியம் என்பதை விளக்குக.

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக.** **(3x15=45)**

1. (அ) திறனாய்வாளர்க்குரிய பண்புகளும் பணிகளும் குறித்துக் கட்டுரை எழுதுக.

   (அல்லது)

   (ஆ) கலை கலைக்காகவா? என்பதை ஆராய்க.

2. (அ) திறனாய்வின் வகைகளைத் தொகுத்துரைக்க.

   (அல்லது)

   (ஆ) இலக்கிய உரையாசிரியர்கள் குறித்துக் கட்டுரைக்க.

3. (அ) மார்க்சியத் திறனாய்வாளர்களின் பணிகள் குறித்த செய்திகளைத் தொகுத்தெழுதுக.

   (அல்லது)

   (ஆ) தலித்தியத் திறனாய்வின் முக்கியத்துவத்தை ஆராய்க.

❋ ❋ ❋